சிறப்புக் குறிப்பு 15

## முக்கிய பொருளாதாரக் கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும்: 2006 - 2007

### உண்மைத்துறை

01 பெப்புருவரி 2006 - மின் பட்டியல் மீதான நிலையான கட்டணம் 100-275 சதவீதத்தினால் மேல் நோக்கித் திருத்தப்பட்டது.

15 ஏப்பிறல் 2006 - பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெயின் சில்லறை விலைகள் லீற்றர் ஒன்றிற்கு ரூ.8.00 இனால் முறையே ரூ.88.00 இற்கும், ரூ. 58.00 இற்கும், ரூ.38.50 இற்கும் அதிகரிக்கப்பட்டன.

24 ஏப்பிறல் 2006 - பயணிகள் பேருந்துக் கட்டணங்கள் 16 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டன.

10 யூன் 2006 - பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெயின் சில்லறை விலைகள் லீற்றர் ஒன்றிற்கு ரூ.5.00 இனால் முறையே ரூ.93.00 இற்கும், ரூ.43.50 இற்கும் அதிகரிக்கப்பட்டன.
- டீசலின் சில்லறை விலை லீற்றர் ஒன்றிற்கு ரூ.3.00 இனால் ரூ.61.00 இற்கு அதிகரிக்கப்பட்டது.

யூலை 2006 - எரிபொருள் உதவித் தொகைகளை நீக்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளதுடன் எண்ணெய்க் கம்பனிகள் தமது பெற்றோலிய விலைகளை செலவுகளின் அடிப்படையில் நிர்ணயிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

01 செத்தெம்பர் 2006 - மின்வலு மீதான தீர்வைகள் ஏறத்தாள ரூ.30 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டன.

ஒத்தோபர் 2006 - வெளிநாட்டு வான் தபால் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன.

01 பெப்புருவரி 2007 - வீட்டு, மத வழிபாட்டிடங்கள் மற்றும் அறக்கொடை நிறுவனங்கள் ஆகியவற்றின் நுகர்வோருக்கான மின்தீர்வைகள் 13 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டன.

### வெளிநாட்டுத்துறை

**வர்த்தகமும் தீர்வையும்**

31 சனவரி 2006 - கோதுமை மாவின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை 2.5 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அல்லது கிலோகிறாமிற்கு ரூ.12.50 இற்கு (இதில் எது கூடியதோ அதற்கு) அதிகரிக்கப்பட்டது.
- அரிசி இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.9.00 இலிருந்து கி.கிறாமிற்கு ரூ.20.00 இற்கு அதிகரிக்கப்பட்டது.

28 பெப்புருவரி 2006 - கோதுமைத் தானியத்தின் மீதான சுங்கத் தீர்வை 2.5 சதவீதத்திலிருந்து 6 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

18 ஏப்பிறல் 2006 - தேயிலை ஏற்றுமதிக்கு ஏற்புடைத்தான வரி கிலோ கிறாமொன்றிற்கு ரூ.2.50 இலிருந்து ரூ.4.00 இற்கு அதிகரிக்கப்பட்டது.
- நிருமாணப் பொறியின் இறக்குமதி, இறக்குமதித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

04 ஓகத்து 2006 - பெரிய வெங்காயத்தின் மீதான இறக்குமதித்தீர்வை ரூ.10.00 இலிருந்து ரூ.20.00 இற்கு அதிகரிக்கப்பட்டது.

16 செத்தெம்பர் 2006 - பெரிய வெங்காயத்தின் இறக்குமதி மீது ரூ.10.00 கொண்ட தீர்வையொன்று விதிக்கப்பட்டது.
- 1979ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் கீழ் உந்து ஊர்திகள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் உட்பட தெரிந்தெடுக்கப்பட்ட இறக்குமதி விடயங்களின் மீது தீர்வையொன்று விதிக்கப்பட்ட வேளையில் நடைமுறையிலிருக்கும் தீர்வையும் திருத்தப்பட்டது.

25 செத்தெம்பர் 2006 - பெற்றோல் இறக்குமதியின் மீது லீற்றர் ஒன்றிற்கு ரூ.5.00 இறக்குமதித்தீர்வை விதிக்கப்பட்டது.

07 நவெம்பர் 2006 - இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளைச் சீனிக்கு வழங்கப்பட்ட கிலோ கிறாமொன்றிற்கான ரூ.4.50 தீர்வைத் தளர்த்தல் நீக்கப்பட்டது.

17 நவெம்பர் 2006 - வெள்ளைச் சீனி மீதான இறக்குமதித் தீர்வை கிலோக்கிறாம் ஒன்றிற்கு ரூ.450 இலிருந்து ரூ.10.00 இற்கு அதிகரிக்கப்பட்டதுடன், அதற்கு 50 சதவீத தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது.
- கப்பல்கள் இறக்குமதி மீதான இறக்குமதித் தீர்வை நீக்கப்பட்டது.
- மாடு, எருமைகள், கோழி, பன்றிகள், ஆடுகள் மற்றும் செம்மறி ஆடு போன்ற மிருகங்களின் இனப்பெருக்கம் மற்றும் அவற்றின் கருவுயிர், கரு போன்றவற்றிற்கு இறக்குமதித் தீர்வையிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டது.
- நகைகள், தங்க செய்வோருக்கான பொருட்கள் மற்றும் போலி நாணயங்கள் என்பவற்றின் இறக்குமதி மீது 15 சதவீதம் கொண்ட வரி விதிக்கப்பட்டது.
- காலணிகளின் இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட சோடி ஒன்றிற்கான வரி 25 சதவீதத்திலிருந்து அல்லது ரூ.110.00 இலிருந்து சோடி ஒன்றிற்கு 25 சதவீதம் அல்லது ரூ.300.00, இதில் எது உயர்வானதோ அதற்கு அதிகரிக்கப்பட்டது.
- தடித்த அட்டை அல்லது அதே வகை பலகைகள் தயாரிப்பதற்கான தெரிவு செய்யப்பட்ட மூலப் பொருட்கள் மீதான இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டது.
- உள்ளூர் திரைப்படக் கைத்தொழிலுக்கு பயன்படுத்தத்தக்க தெரிவு செய்யப்பட்ட பொருட்கள் இறக்குமதி தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- தேயிலைக் கைத்தொழிலில் உள்ள தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் உணவு அல்லது பானத்தின் கைத்தொழில்மய தயாரிப்பு அல்லது உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்களின் இறக்குமதி இறக்குமதித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- கூனி இறால் மற்றும் இறால் இறக்குமதிகள் மீது 20 சதவீதமான அல்லது கிலோகிறாமொன்றிற்கு ரூ.50.00 அதில் எது உயர்வானதோ அந்த அளவிலான வரி விதிக்கப்பட்டது.
- இறால் பண்ணை கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் தெரிவு செய்யப்பட்ட கருவிகளின் இறக்குமதிக்கு, இறக்குமதித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- கோழிப் பண்ணை வைத்திருக்கும் பொறி, கோழிக்குஞ்சு பொரிக்கும் கூடு மற்றும் குஞ்சு வளர்ப்புத் தொகுதி என்பவை இறக்குமதித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- வாசனைப் பொருட்கள் மற்றும் குளியலறைத் தயாரிப்புக்கள், மின்குமிழ், சவர்க்காரம், உராய்வு அடிப்படையிலான எண்ணெய் மற்றும் தொலைக்காட்சிப்பெட்டி, வானொலிப்பெட்டி என்பவற்றின் இறக்குமதிக்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| | - | கலால் (சிறப்பு ஏற்பாடுகள்) வரிக்குட்பட்ட முச்சக்கர வண்டிகள் நீங்கலான ஏனைய உந்து ஊர்திகள் மீது 2.5 சதவீதமான பிரதேச உட்கட்டமைப்பு அபிவிருத்தி வரி விதிக்கப்பட்டது. |
| 04 திசெம்பர் 2006 | - | உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான தீர்வைத் தளர்த்தல் கிலோ கிறாமொன்றிற்கு ரூ.1.50 இலிருந்து கிலோ கிறாமொன்றிற்கு ரூ.20.00 ஆக அதிகரிக்கப்பட்டு 04.12.2006 முதல் 31.01.2007 வரை முழுமையான தீர்வைத் தளர்த்தலுக்கு உட்படுத்தப்பட்டது. |
| | - | பெரிய வெங்காயத்தில் இறக்குமதிக்காக 04.12.2006 முதல் 31.01.2007 வரை கிலோ கிறாம் ஒன்றிற்கு ரூ.20.00 வரையிலான முழுமையான தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது. |
| 11 திசெம்பர் 2006 | - | கருவாடு, மாசிக்கருவாடு, சின்ன வெங்காயம், சின்னப் பயறு, பாசிப்பயறு, தட்டைப் பயறு மற்றும் மிளகாய் போன்ற தெரிவு செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் இறக்குமதி மீது 2007 சனவரி 31 வரை முழுமையான தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது. |
| | - | கோதுமை மா இறக்குமதி மீது கிலோ கிறாமொன்றிற்கு ரூ.5.00 பகுதியளவிலான தீர்வை தளர்த்தல் வழங்கப்பட்டது. அதேவேளை கோதுமை மாவின் மீது தற்பொழுது பிரயோகிக்கப்படும் இறக்குமதித் தீர்வை 11.12.2006 முதல் 31.01.2007 வரை 9 சதவீதம் அல்லது கிலோ கிறாமொன்றிற்கு ரூ.7.50 இதில் எது உயர்வானதோ அந்த அளவுக்கு மாற்றப்பட்டது. |
| 17 திசெம்பர் 2006 | - | பெரிய வெங்காயத்தின் இறக்குமதி மீதான கிலோ கிறாம் ஒன்றுக்கான ரூ.10.00 வரி நீக்கப்பட்டது. |
| 31 சனவரி 2007 | - | தெரிவு செய்யப்பட்ட உணவுப் பொருட்கள், கருவாடு, மாசி கருவாடு, சின்ன வெங்காயம், சின்னப் பயறு, பாசிப்பயறு, தட்டைப் பயறு மற்றும் மிளகாய் என்பவற்றின் இறக்குமதி மீது பிரயோகிக்கப்பட்ட முழுமையான தீர்வைத் தளர்த்தல் 2007 பெப்புருவரி 15 வரைக்கும் நீடிக்கப்பட்டது. |
| 02 பெப்புருவரி 2007 | - | பெற்றோல் இறக்குமதி மீதான இறக்குமதித் தீர்வை லீற்றர் ஒன்றிற்கு ரூ.5.00 இலிருந்து லீற்றர் ஒன்றிற்கு ரூ.20.00 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| 14 பெப்புருவரி 2007 | - | பெற்றோல் இறக்குமதிக்கு வழங்கப்பட்ட லீற்றர் ஒன்றிற்கான ரூ.15.00 தீர்வைத் தளர்த்தல் ஒரு மாத காலத்திற்கு வழங்கப்பட்டது. |
| **வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்** | | |
| 03 ஒத்தோபர் 2006 | - | நாணயமாற்றுநருக்கு புதிய பிரமாணங்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்த வகையில்<br>* ஆகக் குறைந்தது ரூ. 10 மில்லியன் வழங்கப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட மூலதனத்தினைக் கொண்டு இலங்கையில் ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனிகள் மட்டும் நாணயமாற்றுதல் நடவடிக்கையில் ஈடுபட முடியும்.<br>* அவர்களுக்கு நாணயமாற்றுநர்களின் அனுமதிப்பத்திரத்தை மேலும் ஒரு மாதத்திற்கு புதுப்பித்தலுக்கு ஆகக் குறைந்தது ஐ.அ.டொலர் 10,000 சராசரி மாதாந்தப் புரள்வினை பதிவு செய்தல் தேவைப்படுத்தப்பட்டது. |
| திசெம்பர் 2006 | - | பின்வரும் இரண்டு வெவ்வேறு வெளிநாட்டு நாணயக்கணக்குகள் அறிமுகப்படுத்தப்பட்டன.<br>- தொழில்சார் நிபுணத்துவப் பணிகளை வழங்குபவர்களுக்கான "தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் வழங்குபவர் வெளிநாட்டுக் கணக்கு"<br>- முதலீட்டு ஊக்குவிப்புச் சபை கம்பனிகளை உள்ளடக்கிய வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கும் எந்தவொரு கம்பனிக்கும் உள்ளீட்டுப் பொருட்களை வழங்குபவர்களுக்கான உள்ளீடுகளை வழங்குவோருக்கான வெளிநாட்டு நாணயக் கணக்கு |
| 01 சனவரி 2007 | - | நாணய மாற்றுதலுக்கான அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பித்தலுக்கான தேவைப்படும் ஆகக் குறைந்த மாதாந்த சராசரிப் புரள்வு ஐ.அ.டொலர் 10,000 இலிருந்து ஐ.அ.டொலர் 50,000 ற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | நாணயமாற்றுநர்களுக்கு பயணத்தர் காசோலைகளை மாற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட்டது. |
| 08 சனவரி 2007 | - | முன்னைய நாள் இலங்கையர்/ வெளிநாடுகளில் வதியும் இலங்கை ஆகியோர் இரட்டைப் பிரசா உரிமை தகுதியினைப் பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கான வெளிநாட்டு நாணய நிலையான வைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. |

## இறைத்துறை

| | | |
|---|---|---|
| **அரசின் அரசிறை** | | |
| 01 சனவரி 2006 | - | துறைமுக மற்றும் வானூர்தி நிலைய அபிவிருத்தித் தீர்வை 1.5 சதவீதத்திலிருந்து 2.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | சமூக பொறுப்பாண்மை தீர்வை வீதம் 0.25 சதவீதத்திலிருந்து 1 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | நிதியியல் பணிகள் மீதான பெறுமதிசேர்வரி 15 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | இஞ்சிச்சோடா, பேயாவ, மற்றும் நெல்லி ரசம் போன்ற உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மருத்துவக் குணமூட்டப்பட்ட மென்பானங்கள் மீதான பெறுமதி சேர்வரி 20 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| | - | குடிவகை விற்பனை நிலையங்கள் மீதான ஆண்டு உரிமக் கட்டணம் அதிகரிக்கப்பட்டது. |
| | - | டவர் மண்டப நிறுவனத்தால் வழங்கப்பட்ட பணிகள், இலங்கையில் பயிரிடப்பட்ட தானியங்களைப் பயன்படுத்தித் தயாரிக்கும் வேளாண்மை உணவுகள், வெவ்வேறு இயலுமையைக் கொண்ட மக்களால் பயன்படுத்தும் கருவிகள், இலங்கைக் கொடியின் கீழ் பதிவு செய்யப்பட்ட கப்பல்கள் என்பவை பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்கப்பட்டுள்ளன. |
| | - | பால் பதனிடும் பொறி, பதனிடப்படாத மரக்குத்திகள், என்பனவற்றின் இறக்குமதிகளுக்கு பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.<br>கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களுக்கு வெளியே அமைந்துள்ள புதிய கைத்தொழில்களுக்கான புதிய பொறி மற்றும் கருவியின் இறக்குமதிகள், பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| | - | சுங்க மையத்தில் பெறுமதிசேர் வரி அறவிடுவதற்கான கொகாக பெறுமதி மீதான குறிக்கப்பட்ட பெறுமதி 5 சதவீதத்திலிருந்து 7 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | ஏற்றுமதியாளருக்கு பெறுமதிசேர்வரி மீளளிப்புக்களை வழங்குவதற்காக விதிக்கப்பட்ட காலம் 30 நாட்களிலிருந்து 15 நாட்களுக்குக் குறைக்கப்பட்டது. |
| | - | நேரடி ஏற்றுமதியாளர்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள பெறுமதிசேர் வரியைப் பிற்போடும் வசதி, ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்படும் பொருட்களுக்காக பயன்படுத்தப்பட்ட மூலதனப் பொருட்களின் இறக்குமதிகளுக்கும் புடவைப் பங்கீட்டு |

சபையுடன் பதிவு செய்யப்பட்ட நேரில் இறக்குமதியாளர்களால் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களின் இறக்குமதிகளுக்கும் நீடிக்கப்பட்டன.

- சர்வதேச ரீதியிலான சகல விளையாட்டு வைபவங்களும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.

01 ஏப்பிறல் 2006 - தனியாள் வருமானவரி வீதங்கள் பின்வருமாறு திருத்தப்பட்டன.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | முதல் 300,000 | = | இல்லை | (2) | அடுத்த 300,000 | = | 5% |
| (3) | அடுத்த 200,000 | = | 10% | (4) | அடுத்த 200,000 | = | 15% |
| (5) | அடுத்த 200,000 | = | 20% | (6) | அடுத்த 200,000 | = | 25% |
| (7) | அடுத்த 500,000 | = | 30% | (8) | மீதி | = | 35% |

- கம்பனி வருமான வரி முறைமைக்கு பின்வரும் திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
  - கூட்டுறவுச் சங்கங்கள் மீதான கம்பனி வருமான வரி வீதம் 20 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
  - ரூ. 5 மில்லியனை, விஞ்சாத வரி செலுத்தற்குரிய வருமானமாகக் கொண்ட சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகள் மீதான வரி வீதம் 20 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்துக்குக் குறைக்கப்பட்டது.
  - 5 மில்லியனை விஞ்சிய வரி செலுத்தற்குரிய வருமானத்தைக் கொண்ட கம்பனிகளுக்கு பிரயோகிக்கக்கூடிய வரிவீதம் 30 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டது.
  - புதிதாக பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கான வரி வீதம், பட்டியலிடப்பட்ட நாளிலிருந்தது முதல் ஐந்து வருடங்களுக்கு 33 1/2 சதவீதத்தில் நிர்ணயிக்கப்பட்டது.
  - குதிரைப் பந்தயம் மற்றும் தன்னியக்க லொத்தர்கள் என்பனவற்றின் வியாபாரத்திலிருந்தான வருமானம் மற்றும் இலாபத்துக்குப் பிரயோகிக்கக்கூடிய வரிவீதம் 40 சதவீதத்தில் நிர்ணயிக்கப்பட்டது.
  - கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களுக்கு வெளியே ஏற்படுத்தப்பட்ட கம்பனிகளின் வருமானத்திற்கு 5-10 வருட காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்பும் முறிகளை வைத்திருப்பவர்களுக்கும் மற்றும் நல்ல வரி செலுத்துவோருக்குமாக சலுகை அடிப்படையிலான உந்து ஊர்தித் தீர்வை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

04 ஏப்பிறல் 2006 - கொடுகடன் தவிர்ந்த கருவிகள் மற்றும் ஆவணங்களுக்காகவும், பற்றுவரி, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி மற்றும் பங்கு கொடுக்கல் வாங்கல்களுக்கு உட்பட்டவைக்காகவும் முத்திரைத் தீர்வை மீள் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஏப்பிறல் 2006 - பின்வரும் சட்டங்கள் நடைமுறைக்கு வந்தன.
  - 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க கூட்டிணைக்கப்பட்ட உள்நாட்டரசிறைச் சட்டம்
  - 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதாரப் பணிகள் விதிப்புச் சட்டம்
  - 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம்
  - 2006 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க குதிரைப் பந்தய சூதாட்ட தீர்வைகள் (திருத்தச்) சட்டம்
  - 2006 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம்
  - 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நாணய விதி (திருத்தச்) சட்டம்

24 யூலை 2006 - வெளிநாட்டு தொலைக்காட்சி நாடகம் அல்லது சிங்களத்திற்கு மொழி மாற்றம் செய்யப்பட திரைப்படங்களின் மீது திரைப்பட வர்த்தகத் தீர்வை ஒன்று விதிக்கப்பட்டது.

05 ஒத்தோபர் 2006 -
  - சிகரட்டுக்களின் நீளத்தின் அடிப்படையில் சிகரட்டுக்கள் மீதான கலால் வரி அதிகரிக்கப்பட்டது.
  - மதுபானம் மீதான கலால் தீர்வை அதிகரிக்கப்பட்டது.
  - 1600 சிசி இற்கு மேற்படாத உருளை இயலளவினைக் கொண்ட ஊர்திகளின் மீதான கலால் தீர்வை 60 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.
  - 1600 சிசி இற்கு மேற்படாத இயலளவினைக் கொண்ட நிலைய வண்டிகள் மற்றும் பந்தய ஊர்திகள் உட்பட்ட உந்து ஊர்திகள் மீதான கலால் தீர்வை 115 சதவீதத்திலிருந்து 95 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.

25 ஒத்தோபர் 2006 - மண்ணெண்ணெய் மீது பிரயோகிக்கப்பட்ட லீற்றர் ஒன்றிற்கான ரூ.1.25 கலால் தீர்வை நீக்கப்பட்டது.

16 நவெம்பர் 2006 - சில வகை பொருட்களினதும், ஊர்திகளினதும் மீதான கலால் தீர்வை திருத்தப்பட்டது.

17 நவெம்பர் 2006 - வரி மற்றும் கலால் தீர்வையில் பெறுமதிசேர் வரியினைக் கணிப்பிடுவதற்கான கொ.க.க. பெறுமதி மற்றும் பொருட்கள் இறக்குமதி மீதான வரி மற்றும் கலால் (சிறப்பு ஏற்பாடுகள்) வரி என்பன 7 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட நிருமாணப் பொறியின் இறக்குமதிக்கான உரிமத் தேவைப்பாடுகள், 7 ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாரிய பொறிகளின் இறக்குமதிகளை இயலச் செய்யும் பொருட்டு தளர்த்தப்பட்டுள்ளது:
- துறைமுகங்கள் மற்றும் வானூர்தி அபிவிருத்தித் தீர்வை 2.5 சதவீதத்திலிருந்து 3.00 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.
- தீந்தை, காபனேற்றப்பட்ட குடிவகை மற்றும் 40 மைக்குறோனுக்கு குறைவான மற்றும் பொலித்தீன் உறைகள் என்பவற்றுக்கு 5 சதவீதமான கலால் தீர்வை விதிக்கப்பட்டது.
- காபனேற்றப்பட்ட குடிவகைகளின் இறக்குமதிகள் மீது 6 சதவீத கலால் தீர்வை விதிக்கப்பட்டது.

01 சனவரி 2007 - ரூ.1.8 மில்லியன் கீழ்மட்டத்தின் பெறுமதிசேர் வரியின் எல்லையில் உள்ள ஒவ்வொரு தனியாருக்கும் மீளப் பெறப்பட முடியாத 5 சதவீதமான பெறுமதிசேர் வரி விதிக்கப்பட்டது.

- பின்வருவன பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்கப்பட்டவாறு.
  - உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கைத்தறி ஆடைகளின் வழங்கல்
  - இலங்கை மின்சபையினால் இறக்குமதி செய்யப்பட்ட பொறியும் கருவிகளும்
  - செல்லுபடியான வழித்தடம்களுக்கான உரிமைப்பத்திரத்தை வைத்திருக்கும் எந்தவொரு பேருந்து உரிமையாளரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு பேருந்தினதும் இறக்குமதி
  - தொழிற்சாலை நவீனமயப்படுத்துவதற்காக பொறிகளில் இறக்குமதிகளை (தேயிலைக் கைத்தொழிலுக்கான பொறித்தொகுதி உணவு அல்லது பானம் தயாரிப்பதற்கான பொறி மற்றும் தேங்காய் சிரட்டை உடைப்பதற்கான பொறிகள்)

- உலை எண்ணெய்
- இனப்பெருக்கம் செய்யும் விலங்குகளும், பொருட்களும்
- மின் உருவாக்குதலும், பகிர்ந்தளித்தலும்
- கப்பல்களை வாடகைக்குப் பெறல்
- ஏதாவது திரைப்படத்தை தயாரித்தல், விநியோகித்தல் மற்றும் திரையிடல் மற்றும் திரைப்படத் தயாரிப்புக்களுக்கான ஆய்வுகூட வசதிகளின் வழங்கல்
- ஆபரணங்கள்

பின்வரும் பொருட்களின் பெறுமதிசேர் வரி 15 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

- உயர் தொழில்நுட்ப மருத்துவக் கருவிகள்
- அனுமதிச் சீட்டு வழங்கும் பொறிகளைத் தயாரிக்கும் பொறிகள்
- தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் ஒப்புதலுடன் திரைப்படக் கைதொழிலுக்கென தெரிவு செய்யப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்தல்

- கூறு நம்பிக்கைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் என்பன முத்திரைத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டன.

02 சனவரி 2007 - சமூர்த்தி மேலாண்மைச் சபை ஒரு மாவட்ட செயலகம் அல்லது ஒரு பிரதேச செயலகம் என்பன இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியில் பேணுகின்ற கணக்குகள் பற்று வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

**2007இல் வரவிருப்பவை**

01 ஏப்பிறல் 2007 - பொருளியல் பணிக் கட்டணங்களின் கணிப்பீடு தொடர்பான கீழ்மட்ட புரள்வு ரூ.10 மில்லியனிலிருந்து ரூ.7.5 மில்லியனுக்கு குறைக்கப்படும்.

- சிலவகை வர்த்தகம், வணிகம் தொடர்பிலான புரள்வு மீது பொருளியல் பணிக் கட்டணங்களின் விதிக்கத் தேவையற்ற தன்மையானது, அத்தகைய வர்த்தகம், வணிகம் தொடங்கி 3 ஆண்டு காலப்பகுதியில் தயாரிப்புக் கைத்தொழில்கள் தொடர்பில் மட்டுமே பிரயோகிக்கப்படும்.
- கரை கடந்த கொடுக்கல் வாங்கல்களிலிருந்தும் மூடப்பட்ட தொழிற்சாலைகளை மீளத் திறக்கப்படும் போதும் துறைமுகங்களுக்குள்ளேயான வர்த்தக புரள்வு
(மீளத் திறப்பதிலிருந்து 3 ஆண்டு பூர்த்தியின் போது) பொருளியல் பணிக் கட்டணங்களிலிருந்து விலக்களிக்கப்படும்.
- பங்குடமையிலிருந்து வரும் இலாபங்களுக்கு விலக்களிக்கப்படும் போது கூறு நம்பிக்கைகளின் கோரலுக்கு அனுமதியளிக்கப்படும்.
- கூறு நம்பிக்கைகள் 0.5 சதவீதமான வீதத்தில் பொருளியல் பணிக்கட்டணங்களை செலுத்த வேண்டும்.
- கூறுகளின் வழங்கல் அல்லது மாற்றல் ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்படும்
- தொழில் முடிவுக் காலத்தில் கிடைக்கும் நன்மைகளுக்கான வரி பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளன.
  - உதவு தொகைக்காலம் 20 ஆண்டுகள் அல்லது அதற்குக் கூடுதலாக இருப்பின்

| | | |
|---|---|---|
| முதல் | ரூ.5,000,000 | இல்லை |
| அடுத்த | ரூ.1,000,000 | 5% |
| மிகுதி | | 10% |

  - உதவு தொகைக்காலம் 20 ஆண்டுகளுக்கு குறைவாக இருப்பின்

| | | |
|---|---|---|
| முதல் | ரூ.2,000,000 | இல்லை |
| அடுத்த | ரூ.1,000,000 | 5% |
| மிகுதி | | 10% |

- நிருமாணக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் பொறிகளுக்கான பெறுமானத்தேய்வு 12.5 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக அதிகரிக்கப்படும்.
- ஆலோசனைக் கட்டணங்களில் மீதான பிடித்து வைத்திருக்கும் வரி 5 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாக குறைக்கப்படும்.
- இலங்கைக்கு வெளியே நிருமாண வேலையில் ஈடுபட்டுள்ள எந்தவொரு தனியாளின் இலாபங்கள், வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டு இலங்கைக்கு ஒரு வங்கியூடாக பணவனுப்பல் செய்யபட்டால் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.
- இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிர்மாணக் தைத்தொழில் உத்தரவாத நிதியத் தீர்வையினை நிருவகிப்பதற்கு அதிகாரமளிக்கப்படுவார்.

**அரச செலவினம்**

01 சனவரி 2006 - பொலிஸ் மற்றும் ஆயுதப்படைகளின் உறுப்பினர்கள் உள்ளடங்கலாக சகல அரச ஊழியர்களுக்கும் ரூ.1,000 கொண்ட வாழ்க்கைச் செலவுப்படிகளையும், ஓய்வூதியம் பெறுவோருக்கு ரூ.500 கொண்ட வாழ்க்கைச் செலவுப்படியும் வழங்கப்பட்டது.

- சகல அரச ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது.
- ஓய்வூதியம் பெறும் உரிமையைக் கொண்டிருக்கம் அரச ஊழியர்கள் அவர்கள் எடுக்காத விடுப்புகளுக்குப் பதிலாக ஊக்குவிப்புப்படிகளை கொடுப்பனவு செய்தல ஆரம்பிக்கப்பட்டது.
- ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்பட்ட இடைக்காலப்படிகள் ஒன்று சேர்க்கப்பட்டு, குறைக்கப்படாத ஓய்வூதியத்தில் 10 சதவீத அதிகரிப்பு வழங்கப்பட்டது.

05 மே 2006 - தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குத்துறைகளில் சிறு உடமையாளருக்கு வளமாக்கி உதவு தொகை வழங்குவதனை அரசு தொடங்கியது.

நவெம்பர் 2006 - தாய்மாருக்கும் பிள்ளைகளுக்குமான சத்துணைவு நிகழ்ச்சித் திட்டத்திற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

**அரச படுகடன்**

01 பெப்புருவரி 2006 - இலங்கையில் வதியாத இல்ங்கையர்களுக்கு வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை தேசத்தினை கட்டியெழுப்பும் முறிகள் வழங்குவது தொடங்கப்பட்டது.

01 யூலை 2006 - முதனிலை வணிகர்களின் ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடு ரூ.250 மில்லியனிலிருந்து ரூ. 300 மில்லியனிற்கு உயர்த்தப்பட்டது.

- முதனிலை வணிகர்களுக்கு இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன போதுமைக்கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

21 யூலை 2006 - காப்புறுதிக் கைத்தொழில் சட்டத்தின் ஒழுங்கு விதியின் கீழ் பதிவு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட காப்புறுதிக் கம்பனிகளை உள்ளடக்குவதன் மூலம் இலங்கை அபிவிருத்தி முறியின் முதலீட்டுத்தளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

01 நவெம்பர் 2006 - வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிச்சந்தைகளை அரசு திறந்ததுடன், வெளிநின்ற திறைசேரி முறியின் மொத்த தொகையின் 5 சதவீதமான எல்லையினை வரையறுத்தது.

சனவரி 2007 - திறைசேரி முறிச் சந்தையில் மீது ஒழுங்கமைப்புத் தேவைப்பாடுகள் விதிக்கப்பட்டது.

பெப்புருவரி 2007 - சிறிய பெறுமதியைக் கொண்ட ஓரிரவுக்கான மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்கு மத்திய வங்கியின் பரந்தளவிலான வலையமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது.

**வரவிருப்பவை 2007இல்**

- உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு நேரடியாகப் பங்கேற்கும் வணிகர் அந்தஸ்தை வழங்குதல்.

## நிதியியல் துறை

30 சனவரி 2006 - 2006ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (ஆகக் குறைந்த மைய மூலதனம்) பணிப்புரை விடுக்கப்பட்டது. இதன் நியதிகளில் நிதிக்கம்பனிகள் எல்லா நேரங்களிலும் ரூ.200 மில்லியன் கொண்ட பெறுமதி குறைவடையாத மூலதனமொன்றினைப் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

- 2006ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன போதுமை விகிதம்) பணிப்புரை விடுக்கப்பட்டது. இப் பணிப்புரையின் நியதிகளில் மைய மூலதனத் தேவையின் விளைவாக குறிப்பிட்ட மாற்றங்களை ஒருங்கிணைக்கும் பொருட்டு இது அவசியமாகிறது.

28 பெப்புருவரி 2006 - தேசிய கொடுப்பனவுகள் சபை நிறுவப்பட்டது.

01 மாச்சு 2006 - அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் பகுப்பாய்வு, மதிப்பிடல் மற்றும் வங்கியின் முதலீட்டு சொத்துப் பட்டியல்களின் தொழிற்பாடு என்பனவற்றிற்காக முன்மதியுடைய நியமங்கள் தொடர்பாக பணிப்புரை விடுக்கப்பட்டது. இப்பணிப்புரையின் நியதிகளின் படி, அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் அவர்களது முதலீட்டுச் சொத்துப்பட்டியலை முதலீட்டுக் கணக்குகள் மற்றும் வர்த்தக கணக்குகள் ஆகிய இரு வகைகளின் கீழ் பகுப்பாய்வு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

- உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் சந்தை இடர் நேர்விற்கான மூலதன விதிப்பினைக் கணிப்பது பற்றி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

03 மாச்சு 2006 - வங்கித் தொழில் நிலயங்களினைப் பகுப்பாய்வு செய்வது தொடர்பாக அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

06 மாச்சு 2006 - பணம் தூயதாக்குதல் தடைச் சட்டமும் நிதியியல் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடும் சட்டமும் முறையே 2006இன் 5ஆம் இலக்க சட்டமாகவும் 6ஆம் இலக்க சட்டமாகவும் இயற்றப்பட்டுள்ளது.

23 மாச்சு 2006 - 2006இன் நிதியியல் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடும் சட்டம் இல. 6இன் ஏற்பாடுகளின் கீழ் நிதியியல் புலனாய்வுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

29 மாச்சு 2006 - லங்கா செட்டில் பங்கேற்பாளர்கள் மற்றும் லங்கா கிளியர் என்பவற்றுக்கான வணிகத்தின் தொடர்ச்சியை திட்டமிடலின் ஆகக் குறைந்த நியமத்திற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

02 மே 2006 - உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகள் வங்கித் தொழிற்சட்டத்தின் 72ஆம் பிரிவின் கீழ் "கைவிடப்பட்ட சொத்துக்கள்" ஐ (ஒவ்வொரு நிதி ஆண்டு முடிவடைந்த ஆறு மாதங்களினுள்) மத்திய வங்கிக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணிப்புரை வழங்கப்பட்டது. அவ்வாறு கைவிடப்பட்ட சொத்தின் உரிமையாளர் அந்நிதியங்களுக்கு அவனது/ அவளது உரிமைக்கு போதுமான சான்றை வழங்குவதன் மூலம் அவனது/ அவளது நிதியங்களை கோருவதற்கு உரிமையைக் கொண்டுள்ளனர்.

19 மே 2006 - இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 2006இன் இலக்கம் 19 கொண்ட சட்ட விதியாக சட்டமாக்கப்பட்டது.

மே 2006 - காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டது.

01 யூன் 2006 - பாசல் II இன் கட்டமைப்பு I இன் கீழ் மூலதனக் கட்டணத்தைக் கணிப்பது தொடர்பாக பாசல் II பற்றிய வழிகாட்டல்களின் வரைவு எந்நேரத்திலும் அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் 2008-01-01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வரையில் வழங்கப்பட்டன.

16 யூன் 2006 - மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்கள் 25 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 9.00 சதவீதத்திற்கும் 10.50 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டன.

01 யூலை 2006 - உரிமம் பெற்ற வங்கிகளுக்கு தலத்திற்கு வெளியேயான வெப்தளத்தை அடிப்படையாகக் கொண்ட கண்காணிப்பு முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் எழுத்து மூலம் அறிக்கையிடும் முறைமை இடைநிறுத்தப்பட்டது.

24 யூலை 2006 - மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்கள் 12.5 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 9.125 சதவீதத்திற்கும் 10.625 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டன.

28 யூலை 2006 - நிதியியல் குத்தகைச் சட்டம் 2000 இல. 56 இன் பிரிவு 3 (சி)இன் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் அறிவிக்கும் தேவைப்பாடுகளை பலப்படுத்தும் வகையில் பின்வரும் 5 பணிப்புரைகள் மீள வழங்கப்பட்டன.

* நிதியியல் குத்தகை (ஆகக் குறைந்த மூலதனம்) 2006இன் பணிப்புரை இல. 1
* நிதியியல் குத்தகை (அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்கள்) 2006இன் பணிப்புரை இல. 2
* நிதியியல் குத்தகை (தனியாள் கடன்பாட்டாளர் எல்லை) 2006இன் பணிப்புரை இல. 3
* நிதியியல் குத்தகை (அதிகரிப்பு விகிதம் 2006இன் பணிப்புரை இல. 4
* நிதியியல் குத்தகை (ஒதுக்கு நிதியியல்) 2006இன் பணிப்புரை இல. 5

பின்வரும் இரு பணிப்புரைகளுக்கும் வழங்கப்பட்டன.

* நிதியியல் குத்தகை (நிதியியல் கூற்றுக்கள்) 2006இன் பணிப்புரை இல. 6
* நிதியியல் குத்தகை (கம்பனி மற்றும் தொழிற்பாட்டு தகவல்) 2006இன் பணிப்புரை இல. 7

28 செத்தெம்பர் 2006 - மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதங்கள் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 9.625 சதவீதத்திற்கும்,11.125 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டன.

18 ஒத்தோபர் 2006 - விசேட பொருட்களை நாட்டுக்குள் கொண்டு வருவதற்காக கொடுகடன் பத்திரங்களை திறக்க வேண்டாமென்று வர்த்தக வங்கிகளைக் கேட்டுக் கொள்ளும் பணிப்புரை வழங்கப்பட்டது. அவ்வாறான கொடுகடன் பத்திரங்கள் திறக்கப்படுகின்ற போது கொடுகடன் பத்திரத்தைத் திறக்கும் வங்கிகளுடன் ஆகக் குறைந்தது 50 சதவீத காசு வைப்பிடப்பட்டு அவ்வாறான கொடுகடன் பத்திரங்கள் அதன் மூலம் காப்பிடப்பட்டால் வழங்கப்படலாம்.

19 ஒத்தோபர் 2006 - ஆவணங்கள் ஏற்பனவு நியதிகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதிப் பெறுமதிகளுக்கு மத்திய வங்கியின் 50 சதவீதமான அளவு வைப்புத் தேவைப்பாடு விதிக்கப்பட்டது. இதன்படி, ஆகக் குறைந்த வைப்பை முன் வைக்கும் நோக்கத்திற்காக இறக்குமதியாளர்களுக்குரிய வங்கிகள் எந்தவித முற்பணத்தையும் வழங்கக் கூடாது.

நவெம்பர் 2006 - இலங்கை நிதியியல் பணிகள் பணியகம் நிறுவப்பட்டது.

21 நவெம்பர் 2006 - முதனிலை ஈட்டினால் சொத்துக்கள் மீது பெறப்பட்ட கடன்கள் மற்றும் ஏனைய கடன்களும் முற்பணங்களுக்கும் வகைப்படுத்தப்பட்ட கடன்கள் தொடர்பான இடர்நேர்வு நிறையேற்றல் முறையே 50 சதவீதத்திலிருந்தும் 100 சதவீதத்திருந்தும் 55 சதவீதத்திற்கும் 110 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டன.

26 நவெம்பர் 2006 - அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயச்செலாவணி வணிகர்களுக்கும், வெளிநாட்டு நாணயத் தெரிவுகளின் அடிப்படையில் இலங்கை ரூபாவில் வழங்குவதற்கும் ஈடுபடுவதற்கும் அனுமதியளிக்கும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

06 திசெம்பர் 2006 - செயற்படும் மொத்தக் கடன்கள், முற்பணங்கள், வரவேண்டிய கடன்கள் உரிய கணக்குகளுக்கு பற்று வைக்கப்பட்ட ஐயக் கணக்கிலான வட்டியைக் கழித்த முற்பணங்கள் என்பவற்றின் 1 சதவீதம் கொண்ட பொதுவான ஏற்பாட்டை மேற்கொள்வதற்கான பணிப்புரை ஒன்று அனைத்து உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு வழங்கப்பட்டது. இந்தத் தேவைப்பாடுகள் 31.12.2006இல் தொடங்கும் ஒவ்வொரு காலாண்டும் 0.1 சதவீதமானவற்றை வழங்குவதன் மூலம் 10 காலாண்டுகளில் பூர்த்தியாக்கப்பட வேண்டும்.

11 திசெம்பர் 2006 - 2005இல் விதிக்கப்பட்ட ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாட்டினை, ஒவ்வொரு விடயத்தின் அடிப்படையில் பூர்த்தி செய்வது தொடர்பாக வங்கிகளுக்கு 2008 இறுதிவரையிலும் 2009 இறுதி வரையிலும் கால அவகாசம் வழங்கப்பட்டது. இதன்படி வங்கிகள் ஆகக் குறைந்த தேவைப்பாட்டில் குறைந்தது 50 சதவீதத்தினையும், 100 சதவீதத்தினையும் முறையே 2008 இறுதியிலும் 2009 இறுதியிலும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

13 திசெம்பர் 2006 - லங்கா செட்டில் முறைமையில் உள்ளக பங்கேற்பாளரின் கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பனவு செய்வதற்கான விதிகளும், நியமங்களும் லங்கா செட்டில் பங்கேற்பாளருக்கு வழங்கப்பட்டன.

15 திசெம்பர் 2006 - மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்கள் 37.5 அடிப்படைப்புள்ளிகளினால் முறையே 10.00 சதவீதத்திற்கும், 11.50 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டன.

29 திசெம்பர் 2006 - நிதியியல் கம்பனிகள் (அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகள்) 2006இன் பணிப்புரை இல. 3 வழங்கப்பட்டது.

- நிதிக் கம்பனிகள் (தனியாள் கடன்பாட்டாளர் வரையறை) 2006இன் பணிப்புரை இல. 4 வழங்கப்பட்டது.
- நிதிக் கம்பனிகள் (கடன் வழங்கல்) 2006இன் பணிப்புரை இல. 5 வழங்கப்பட்டது.
- நிதிக் கம்பனிகள் (பணிப்பாளருடனும் அவர்களுடைய குடும்பத்தாருடனுமான கொடுக்கல் வாங்கல்கள்) 2006இன் பணிப்புரை இல. 6 வழங்கப்பட்டது.
- நிதிக் கம்பனிகள் (முதலீடு) 2006இன் பணிப்புரை இல. 7 வழங்கப்பட்டது.
- நிதிக் கம்பனிகள் (விளம்பரங்கள்) 2006இன் பணிப்புரை இல. 1 வழங்கப்பட்டது.

02 சனவரி 2007 - 2007இற்கும் அதற்குப் பின்பும் "நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகளுக்கான வழிகாட்டல்" அறிவிக்கப்பட்டது.

19 சனவரி 2007 - வங்கிகளில் பங்கு உடைமையாளர் தொடர்பான புதிய கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு புதிய பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

13 பெப்புருவரி 2007 - நிதியியல் துறையில் ஒழுங்கு முறைப்படுத்துவோர்களிடையே ஒருங்கிணைப்பு மேம்படுத்துவதற்காக "உள்ளக ஒழுங்கமைப்பு நிறுவனங்கள் சபை" நிறுவப்பட்டது.

14 பெப்புருவரி 2007 - கொடுகடன் தகவல் பணியகத்தின் பரப்பெல்லையை நவீனமாக்குவதற்கும், விரிவாக்குவதற்கும், கொடுகடன் தகவல் பணியக சட்டத்திற்கான திருத்தங்கள் நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

20 பெப்புருவரி 2007 - உரிமம் பெற்ற வங்கிகளால் தனியான வாடிக்கையாளருக்கோ அல்லது குழுவாக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கோ வழங்கக்கூடிய ஆகக் கூடிய தொகை தொடர்பான மதிநுட்பமான தேவைப்பாடுகளை உள்ளடக்கம் விதத்தில் வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு புதிய பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

23 பெப்புருவரி 2007 - மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்கள் 50.00 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 10.50 சதவீதத்திற்கும் 12.00 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டன.

**2007இல் வர இருப்பவை**

- வேளாண்மைத் துறைக்கான கட்டாயக் கடன் வழங்கல் மீது பணிப்புரைகளை வழங்குதல்.
- வங்கிகளின் கம்பனி ஆளுகை மீது கட்டாய விதிகளை வழங்குதல்.
- பாசில் II இன் நடைமுறைப்படுத்தல் மீது இறுதி வழிகாட்டலை வழங்குதல்.
- கடன் அட்டைத் தொழிற்பாட்டிற்கான வழிகாட்டல்களை வழங்குதல்
- வைப்புக்களை ஏற்கும் நுண்பாக நிதி நிறுவனங்களை ஒழுங்கு முறைப்படுத்துவதற்க நுண்பாக நிதி நிறுவனங்கள் சட்டத்தை அறிமுகப்படுத்தல்.
- நிதிக் கம்பனிகள் சட்டத்தைத் திருத்துதல்.